**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சிராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 20–ஆம் நாள், வியாழக்கிழமை

**<u>இ.ம.எண்.15/2025 இன் அ.வ.எண். 194/2004</u>**

**<u>CNR No. TNSA13-000025- 2004</u>**

1. செல்லம்மாள் (இறந்தவர்)
2. இளையப்பன் . . . மனுதாரர்கள்/1, 2 வாதிகள்

/எதிராக/

1. செங்கோடன் . . . எதிர்மனுதாரர்/3 ம் வாதி
2. கைலப்ப கவுண்டர் (இறந்தவர்)
3. நல்லம்மாள் (இறந்தவர்)
4. குப்புசாமி (இறந்தவர்)
5. நடேசன்
6. சரோஜா
7. மணி (எ) பெருமாயி
8. தங்கம் (எ) பார்வதி
9. சரோஜா (இறந்தவர்)
10. P.கலைச்செல்வி
11. K.பழனிவேல்
12. S.வேல்முருகன்
13. A.நீலாவதி . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 20.11.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள்/1, 2 வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராம்சுந்தர் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதி தரப்பில் திரு.L.தயாளன் அவர்கள் ஆஜராகியும், 5, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.K.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், 10, 11 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.S.ரவிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், 7, 8, 9, 12,

13 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்/2ம் வாதி இம்மனுவை வா.சா.2 சாட்சியத்தை Recall செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர்/2ம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :**

மனுதாரர் மேற்படி வழக்கில் 2ம் வாதி என்றும், வாதிகள் பாகம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 2 முதல் 13 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதி மனுதாரரின் சகோதரர் என்றும், மனுதாரர்கள்/1, 2 வாதிகள் மற்றும், 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதி ஆகியோர் சேர்ந்து பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்ததாகவும், பின்னிட்டு இருவருக்கும் கருத்து வேறுபாடு காரணமாக அவர் மாற்று மனுவை தாக்கல் செய்து அம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், 1 எதிர்மனுதாரர்/3ம் வாதி கைலப்ப கவுண்டரின் சட்டப்பூர்வ வாரிசுகளான பிரதிவாதிகளுடன் சேர்ந்து கொண்டு தனியாக வழக்கறிஞரை நியமனம் செய்து தன்னை PW2 ஆக விசாரித்துக் கொண்டதாகவும், அவரை பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை செய்த பின்னரே மனுதாரர் அவரை குறுக்கு விசாரணை செய்ய இயலும் என்றும், வழக்கானது குறுக்கு விசாரணைக்காக 27.10.2025 அன்று வாய்தா போடப்பட்டு பிரதிவாதிகள் 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதியை குறுக்கு விசாரணை செய்தவுடன் PW2 சாட்சியத்தை முடித்துவிட்டதாகவும், 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதி பிரதிவாதிகளுடன் கைகோர்த்துக் கொண்டு அரூரில் உள்ள கூட்டுக் குடும்பச்

சொத்தில் அவரது பங்கை பெற்றுக்கொண்டு, இந்த வழக்கை திசைதிருப்ப முயற்சிப்பதாகவும், எனவே மனுதாரர் அவரை குறுக்கு விசாரணை செய்ய வேண்டி PW2 வாதி தரப்பை மீண்டும் அழைக்க(Recall) வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. **<u>1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதி இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மறுத்தும், இந்த வழக்கானது மனுதாரர்கள் மற்றும் இந்த எதிர்மனுதாரரால் பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் மற்றும் தனி சுவாதீனம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர்கள்/1, 2 வாதிகளுக்கு, 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதி மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து தாவா சொத்தில் பாகம் இல்லை என மறுத்து வந்ததால் இந்த எதிர்மனுதாரரால் தன்னை பிரதிவாதியாக பாவிக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், அதனால் இந்த எதிர்மனுதாரர் வழக்கில் 3ம் வாதியாக இருந்து வருவதாகவும், மேலும் வாதி தரப்பு சாட்சியை மற்றொரு வாதியே குறுக்கு விசாரணை செய்ய இயலாது என்றும் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. **<u>10ம் எதிர்மனுதாரர்/9ம் பிரதிவாதி தாக்கல் செய்து 11ம் எதிர்மனுதாரர்/10ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

வழக்கானது 1, 2 மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரரால் 2 முதல் 13 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டதாகவும், இந்த மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் ஆகியோர்கள் சேர்ந்து அ.வ.எண்.200/2004 வழக்கை நடத்தி வருவதாகவும், மனுதாரர்கள் தங்களது பாகத்தை ஏற்கனவே 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதிக்கு பாகவிடுதலை பத்திரம் எழுதி வைத்துள்ளதாகவும், இந்த எதிர்மனுதாரர் 3ம் பிரதிவாதியின் வாரிசு என்ற அடிப்படையில் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரர்/3ம்

வாதியால் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு அதன் பின்னிட்டே குறுக்கு விசாரணைக்கு பல வாய்தாக்கள் வழங்கப்பட்டதாகவும், தற்பொழுது வழக்கை காலதாமதம் செய்யும் நோக்கத்தில் 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதியின் தூண்டுதலின் பேரில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

5. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

6. மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

வழக்கானது மனுதாரர்கள்/1, 2 வாதிகள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதியால் பாகம் மற்றும் தனி சுவாதீனம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையின் போது 1ம் வாதி இறந்துவிட்டதாகவும், 3ம் வாதி தனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் தனக்கு பாதி பாகம் கிடைக்க வேண்டும் என கூறி நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளதாகவும், எனவே அவரது நிரூபண வாக்குமூலம் மற்றும் சாட்சியம் இந்த வழக்குரைக்கு எதிராக அமைந்துள்ளதாகவும், தாவா சொத்தானது மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதி ஆகியோர்களுக்கு கூட்டாக பாதி பாகம் சேர வேண்டியது எனவும், எனவே மனுதாரர்கள்/1, 2 வாதிகளுக்கு வாதி தரப்பு சாட்சியான 3ம் வாதியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதி தரப்பு சாட்சியை வாதியே குறுக்கு விசாரணை செய்ய இயலாது என்று ஆட்சேபனை செய்து வாதிடப்பட்டது.

இந்திய சாட்சிய சட்டம் 154 (157BSA)ன் படி ஒரு சாட்சியை கொண்டு

வரும் நபர் தனக்கு எதிராக சாட்சியானவர் சாட்சியம் அளிக்கும் பட்சத்தில் அவரே குறுக்கு விசாரணை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரர்/3ம் வாதியானவர் வழக்குரைக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள பட்சத்தில் மனுதாரர்/2ம் வாதி தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. **தீர்வு :**

இறுதியாக இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 20–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.11.20 19:14:18 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

<u>மனுதாரர்/எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.11.20 19:14:24 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**கூ.மா.உ.நீ. ஆத்தூர்**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 15/2025 இன்
அ.வ. எண்.194/2004
நாள் : 20.11.2025